
# திராவிட மொழி இலக்கியங்களில் பாரம்பரிய உணவுகளும் இயற்கை மருத்துவமும்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

# *Traditional Foods and Nature care in Dravidian Languages*

(Internationl Seminar)




பதிப்பாசிரியர்கள்

பேரா. முனைவர் **ப.சிவராஜி**

பேரா.முனைவர் **அ.மரிய செபஸ்தியான்**

பேரா.முனைவர் **ஞா.சுஜாதா**

திருமதி **ச.மலர்க்கொடி**

பேரா.முனைவர் **க.முருகேசன்**

பேரா. முனைவர் **ஜான்மனுவேல்**

திரு.**எம்.பிரசாத்**

பேரா. **ஆ.மீராமைதீன்**

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | திராவிட மொழி இலக்கியங்களில் பாரம்பரிய உணவுகளும் இயற்கை மருத்துவமும் *"Traditional Foods and Nature care in Dravidian Languages* |
| பதிப்பாசிரியர்கள் | : | பேரா. முனைவர் **ப.சிவராஜி**<br>தமிழ்த்துறைத் தலைவர்,<br>இசுலாமியாக் கல்லூரி (தன்னாட்சி),<br>வாணியம்பாடி. வே.மா. 635 752<br>முனைவர் **அ.மரிய செபஸ்தியான்**<br>முனைவர் **ஞா.சுஜாதா**<br>திருமதி **ச.மலர்க்கொடி**<br>முனைவர் **க.முருகேசன்**<br>பேரா. முனைவர் **ஜான்மனுவேல்**<br>திரு.**எம்.பிரசாத்**<br>பேரா. **ஆ.மீராமைதீன்** |
| மொழி | : | தமிழ், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம், மலையாளம். |
| விலை | : | ரூ.600 |
| பக்கங்கள் | : | 596 |
| முதல் பதிப்பு | : | 18–03–2017 |
| ஒளியச்சு | : | அமிர்தகனி ஜெகவீரன்,<br>சரவணா கிராபிக்ஸ், வேலூர்.<br>செல்: 98658 20640. |
| பதிப்பகம் | : | **பாரிதி பதிப்பகம்**<br>56சி/128. பாரத கோயில் அருகில், ஜோலார்பேட்டை,<br>வேலூர் மாவட்டம்–635 851 செல் : 72006 93200 |
| வெளியீடு, உரிமை © | : | **ஏலகிரி பாரதி தமிழ்ச்சங்கம்**<br>ஏலகிரி, வேலூர் மாவட்டம் |
| **ISBN** | : | 978-81-930475-9-0 |

| | | | |
|---|---|---|---|
| 40. | திருச்செங்கோடு வட்டார பாரம்பரிய உணவு முறைகள்<br>ச.தேவராஜ் | ... | 214 |
| 41. | துரித உணவுகள் ஒரு தொலைநோக்குப் பார்வை<br>முனைவர் க.இந்துமதி | ... | 216 |
| 42. | பாரம்பரியம் போற்றும் இயற்கை உணவுகள்<br>அ.மீராமைதீன் | ... | 222 |
| 43. | நாயன்மார்களின் விருந்தோம்பல் பண்பு<br>முனைவர் கோ.பா. தாட்சாயிணி. | ... | 228 |
| 44. | இலவு மரத்தின் மகத்துவமும் மருத்துவமும்<br>முனைவர் வே. கீதா | ... | 231 |
| 45. | குழந்தை மருத்துவத்தின் சிறப்புத்தன்மைகள்<br>பேரா. முனைவர் ஜான்மேனுவல் | ... | 235 |
| 46. | மலர்களின் மாண்புகளும் மருத்துவமும்<br>இரா. சங்கரேஸ்வரி | ... | 238 |
| 47. | சங்க இலக்கியங்களில் உணவு முறைகள்<br>பேரா. க. தமிழ்ச்செல்வி | ... | 244 |
| 48. | திருவள்ளுவரின் உணவே மருந்து<br>மு. பொன்னி சிவக்குமார் | ... | 248 |
| 49. | உணவே மருந்து<br>ஆர்.எஸ்.ஜவஹர்பாபு | ... | 253 |
| 50. | பெரும்பாணாற்றுப்படையில் உணவுமுறை<br>ஜெ.ஜெயசாந்தி | ... | 255 |
| 51. | ஐவகை நிலத்தில் உணவுகளும் மருந்துகளும்<br>வீ.கோவிந்தராஜ் | ... | 261 |
| 52. | உணவே மருந்து ! மருந்தே உணவு !<br>ஞானபாரதி. ஏ.சி.வெங்கடேசன், எம்.ஏ., | ... | 265 |
| 53. | கம்பன் உணர்த்தும் விருந்தும் மருந்தும்<br>முனைவர் க.முருகேசன் | ... | 270 |
| 54. | இடைக்காட்டுச்சித்தரின் மூலிகை மருத்துவம்<br>அர.அன்பழகி | ... | 279 |
| 55. | கம்பன் காட்டும் மூலிகை மருத்துவம்<br>மு.இராதா | ... | 284 |
| 56. | கீரை மருத்துவம்<br>பேரா. த.ஜீவா | ... | 292 |
| 57. | மலர்கள் மருத்துவம்<br>இரா.கோட்டீஸ்வரன் பி.லிட்.,எம்.ஏ.,எம்.ஏ., பி.எட்., | ... | 297 |
| 58. | சங்க பறுவல்களில் புலால் உணவு<br>முனைவர் அ.மரிய செபஸ்தியான் | ... | 302 |
| 59. | பெரும்பாணாற்றுப்படையில் உணவு முறை<br>ஜெ. ஜெயசாந்தி | ... | 307 |
| 60. | மூலிகைகளின் மருத்துவ குணங்கள்<br>ஆர்.பழனிசாமி | ... | 313 |

# கம்பன் உணர்த்தும் விருந்தும் மருந்தும்

முனைவர் க.முருகேசன்
தமிழ்த்துறைத்தலைவர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் 641 029.

53

## முன்னுரை

காலத்திற்கேற்ற வளர்ச்சியும், வளர்ச்சிக்கேற்ற மாற்றங்களும் தேவைதான் என்றபோதும் மாறாத விழுமியங்களாகிய அறநெறிகளுக்கு என்றென்றும் மதிப்புண்டு. தொன்மையும் இலக்கியச்சுவையும் ஒருங்கே பொருந்தியுள்ள தமிழ் இலக்கியப் பனுவல்களில் ஊடும் பாவுமாக நன்னெறிகளாகிய அறங்கள் நெய்யப்;பட்டுள்ளன. மானுட வாழ்வு மதிப்புடையதாக அமைவதற்கும், அடுத்த நூற்றாண்டுத் தலைமுறையை நல்வழிப்படுத்துவதற்கும் தேவையான செல்நெறிக் கோட்பாடுகளை விருந்தாகவும் மருந்தாகவும் கம்பன் தன் காப்பியத்தில் பதிவுசெய்துள்ள பாங்கினைப் புலப்படுத்திக் காட்டுவது இவண் நோக்கமாகின்றது.

## இலக்கியமும் அறவிருந்தும்

படிப்பாரை மகிழ்விப்பதைப் பணியாகக் கொள்ளாமல் படிப்போருக்குப் பயன்தரும் படைப்பைத் தருவதையே விழுமியப் பணியாகக் கம்பன் கொண்டிருந்தான் என்பதற்குப் பல சான்றுகள் காணக்கிடைக்கின்றன. அறம் என்ற சொல்லுக்குப் பொருள் உரைக்கும் கழகச்சொல்லகராதி, "கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை, அறநூல், அறக்கடவுள், தருமதேவதை, தீப்பயனுண்டாக்கும் சொல்" என்ற விளக்கத்தைத் தருகின்றது. தருமம் என்ற சொல்லுக்கு, "அறம், இயல்பு, உபம், நிடதம், ஒப்பு, சுத்தத்தொழில், நல்லொழுக்கம், நியாயப் பிரமாணம், வேதம், கடமை, நற்செயல், நீதி, இயற்கை, நன்கொடை" போன்ற பொருள்களைக் குறிப்பிடுகின்றது (கழகத் தமிழகராதி, ப.49).

அகத்துறுப்புகள் எவையென்பதைச் சூடாமணி நிகண்டு "அழிந்தோரை நிறுத்தல், அறம் விளக்கம், ஐயப்படாமை, பழியை நீக்கல், மயக்கமின்மை, பேரன்புடைமை, விருப்பமின்மை, வெறுப்பின்மை என எட்டு அங்கங்களைச் சுட்டிக்காட்டுகின்றது (சூடாமணி நிகண்டு, *12:83*).

சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள 'அறம் பாடிற்றே ஆயிழை கணவ' 'அறவிலை வணிகள் ஆயலன்' 'அறம் புரியந்தணர்' போன்ற சொல்லாட்சிகளும், 'அறத்தொடு நிற்றல்' என்ற துறையும் குறிப்பிடத்தக்கவை என்கிறார் அ.அறிவுநம்பி (கம்பரின்அறவியல், ப.*9*).